கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2025**
அதன்
**அசல் வழக்கு எண்.273/2022**

(CNR No. TNTS-01-000781-2022)

சேர்மக்கனி ... மனுதாரர்/வாதி

..எதிர்..

1. துரைச்சாமி
2. பெருமாள்தாய்
3. முத்துக்குமார் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனுவானது கடந்த 02.03.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ. அண்ணாதுரை அவர்களும், 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சுந்தரேசன் அவர்களும் ஆஜராகியுள்ள நிலையில், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பார்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர்கள் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**:–

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படியார்களிடமிருந்து அடமானத் தொகையை வட்டியுடன் வசூலிக்க உத்தரவிடக்கோரி இந்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 3 ஆம் பிரதிவாதியான இந்த நிர் 3 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தபசில் 10 வது லக்க சொத்தை அவர் 1, 2 பிரதிவாதிகள்/1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து நல்லெண்ணத்தின்பேரில் கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் மூவரும் கூட்டு சேர்ந்து மனுதாரரை மோசடி செய்யும் வகையில் செயல்படுகிறார்கள் என்ற சங்கதியானது மேற்படி எதிர்வழக்குரை சங்கதிகளை ஆராய்ந்த பின்னர் தான் இந்த மனுதாரருக்கு தெரியவந்ததாகவும், எனவே மேற்படி எதிர்வழக்குரை சங்கதிகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் இந்த மனுதாரர் தரப்பில் பதில்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானதாகும். எனவே மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>3 வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**:–

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுச் சங்கதிகள் உண்மையானவைகள் இல்லை. அசல் வழக்கில் 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 03.01.2023 ஆம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 06.02.2023 ஆம் தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்டு, 2–1/2 ஆண்டுகள் கழித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. 3 வது எதிர்மனுதாரர் தபசில் சொத்தினை கிரையம் பெறும்போது வில்லங்கம் பார்த்து தான் கிரையம் பெற்றுள்ளார். மேலும், தபசில் சொத்தை தவிர 1, 2 எதிர்மனுதாரர்களின் இதர சொத்துக்களைப் பொறுத்து அடமானத்திற்கு ஈடு செய்துகொள்வதில் 3 வது எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"இம்மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>பிரச்சனைக்கான தீர்வு</u>:–

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படியார்களிடமிருந்து அடமானத் தொகையை வட்டியுடன் வசூலிக்க உத்தரவிடக்கோரி இந்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் 3 ஆம் பிரதிவாதியான இந்த நிர் 3 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தபசில் 10 வது லக்க சொத்தை அவர் 1, 2 பிரதிவாதிகள்/1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து நல்லெண்ணத்தின்பேரில் கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் மூவரும் கூட்டு சேர்ந்து மனுதாரரை மோசடி செய்யும் வகையில் செயல்படுகிறார்கள் என்ற சங்கதியானது மேற்படி எதிர்வழக்குரை சங்கதிகளை ஆராய்ந்த பின்னர் தான் இந்த மனுதாரருக்கு தெரியவந்ததாகவும், எனவே மேற்படி எதிர்வழக்குரை சங்கதிகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் இந்த மனுதாரர் தரப்பில் பதில்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கில் 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 03.01.2023 ஆம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 06.02.2023 ஆம் தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்டு, 2–1/2 ஆண்டுகள் கழித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், 3 வது எதிர்மனுதாரர் தபசில் சொத்தினை கிரையம் பெறும்போது வில்லங்கம் பார்த்து தான் கிரையம் பெற்றுள்ளதாகவும், மேலும், தபசில் சொத்தை தவிர 1, 2 எதிர்மனுதாரர்களின் இதர சொத்துக்களைப் பொறுத்து அடமானத்திற்கு ஈடு செய்துகொள்வதில் 3 வது எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது என்றும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டிருக்கிறார்.

8. இந்த மனுவின் மனுதாரர் தரப்பில் இந்த நிர் 3 வது எதிர்மனுதாரர், தான் 1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து தபசில் 10 வது இலக்க சொத்தை பெற்ற கிரையமானது சரியான பிரதிபிரயோஜனத்தின்பேரில் பெற்றுக்கொண்ட கிரையம் என்று தெரிவித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் மூவரும் கூட்டு சேர்ந்துகொண்டு அவ்வாறு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதால் அதற்கான பதில்எதிர்வழக்குரையானது இந்த மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானது என்று வாதிட்டுள்ளதை அசல் வழக்கின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து பார்க்கும்போது, அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையானது கடந்த 03.01.2023 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்கள் 06.02.2023 ஆம் தேதியன்று வனையப்பட்டு, சுமார் 2–1/2 வருடங்கள் கழித்து மனுதாரரால் பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், பதில் எதிர்வழக்குரையை அங்கீகரிப்பதன் மூலம் எதிர்மனுதாரருக்கு எந்தவிதத்திலும் பாதகம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், மேற்படி பதில் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதி குறித்து குறுக்கு விசாரணை செய்வதற்கு 3 வது எதிர்மனுதாரருக்கு விசாரணையின்போது வாய்ப்புள்ளது என்பதைக் கருத்தில்கொண்டும், இந்தச் சூழ்நிலையில் இந்த மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருந்தபோதிலும், அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு 2–1/2 வருட காலத்திற்குப் பின்னிட்டு இந்த மனுதாரர்/வாதி தரப்பில் பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது இந்த மனுவை அனுமதிப்பதன் மூலம் 3 வது எதிர்மனுதாரருக்கு ஏற்படவிருக்கும் காலவிரயத்தை செலவுத்தொகையின்பேரில் ஈடு செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, மனுதாரர், 3 வது எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.500/–ஐ வருகிற 10.03.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும் தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 10.03.2026.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2026.03.06 13:08:34 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

இல்லை

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2026.03.06 13:08:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

-----------------------------------

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

இடைநிலை மனு எண்.11/2024

அதன்

அசல் வழக்கு எண்.273/2022

உத்தரவு (நேரிய)

நாள்: 05.03.2026

-----------------------------------